**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. THRIVENI EARTH MOVERS PRIVATE LIMITED, LEASE OVER AN EXTENT OF 5.00.0 HA AT SF.NO.679/2 (PART–3), THORAPALLIAGRAHARAM VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 28.08.2024 AT 10.30 AM AT M/S. SRI SATHYA SAI MARRIAGE HALL, SIPCOT SERVICE ROAD, SIPCOT PHASE II, MORANAPALLI VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Hosur, Krishnagiri District |
| 3 | Er. V.Deenadayalan | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.SPR. Venkatachalam | : | The Representative of the Proponent,<br>**M/s. Thriveni Earth Movers Private Limited** |
| 5 | Thiru.S.Rajkumar | : | EIA Consultant,<br>M/s. Geo Exploration and Mining Solutions, Salem |
| | Public | : | 66 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Thriveni Earth Movers Private Limited, lease over an extent of 5.00.0 Ha at SF.No.679/2 (Part–3), Thorapalli Agraharam Village, Hosur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinakaran" and "The New Indian Express" dated 23.07.2024 and bit notices regarding public hearing was issued to the public of Thorapalli Village, Kumudaepalli Village and Amaletti Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.S.Rajkumar, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Rough Stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited

the public to express their views and comments about the proposed Rough Stone quarry project.

The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Ravikumar, Kumudaepalli Village:**

Thiru. Ravikumar has said that this is a good project and he welcomed the quarry project.

**2. Thiru. Mahadeavan, Gandhinagar:**

Thiru. Mahadeavan has said that, even though by lease to the quarry has been granted and the funds are not being properly utilized for our village . At least 2000 tree saplings should be planted and maintained before completion of quarry activity. It will avail to the future generations and cattle. This year the temperature was 130 degrees in Hosur. There is no water in bore wells. Hosur has never seen this situation, because of no rain in Kamandoddi village. But, rain showers in the middle of the forest. Similarly, no rain falls in Berandapalli Village due to minimum number of trees. He requested that about 2000 or 3000 tree saplings should be planted and maintained as mentioned above.

**3. Thiru. Vinod, Amaletti Village:**

Thiru. Vinod has said that, public residing in and around were not aware of the public hearing to be conducted here. Women and children in this village will be affected by this quarry. Hence this meeting should have been informed to this panchayat peoples before conducting.

Also, no one will be in our village when the audio announcement is made between 12 to 1 PM. Therefore, he requested that the audio announcement for conducting the public hearing should be made in the evening or early morning time. Likewise, no one is ware of the newspaper advertisement. Therefore, he requested that an announcement should be made to all the public.

So many quarries are located around Hosur and we do not oppose those quarries. However, the road facility is not in good condition in our village and heftily ponderous conveyances from the quarries do not go at opportune intervals. They eradicate plants. Due to this, trees are not developed further and groundwater is heavily affected.

It was reported by the proponent that present, water, land and air quality were reported good. But the people in the village are affected. Also said that, no road facilities are constructed and there is a lot vibration in the nearby residences due to blasting of quarry activity. This quarry is located 100 meters to 150 meters away from the houses. However, as per the rules and regulation quarry is to be located only at a distance of 500 meters to 1000 meters from the houses. Due to blasting of quarry which causes cracks in nearby houses. When we asked about this to the quarry management, they said that quarry is located as per rules.

Medical facilities are not yet to be provided and he requested to provide medical facilities at least once in a year. Additionally, every family in the village should be visited and to enquire about the effects. Agriculture is the main activity in our village and he expressed that agriculture is getting affected more and he wants to know the reason.

Our village does not have road facilities, since it was informed that the wildlife animals will be affected due to construction of road. But, quarry operates with road facilities inside the forest.

Also, the river flowing in our village is polluted with dust. So, he requested to analyse the quality of the river. Consequently, he requested to consider and accept his above views on behalf of all the people.

4. **Thiru. Ramamoorthy, Thorapalli Village:**

Thiru. Ramamoorthy has said that, yesterday you have mentioned about two quarries. Now you have mentioned the same. For past 30 years we are institng to construct a road for a distance of 500 meters. But not able to construct, because forest department has not given permission/. But, the quarry management has provided the road. Mr. Vinod has already mentioned about the same. Because there are more pits in the road and affect school students. He requested that sanction to construct road. Additionally, he added that, he has no objection for two proposed quarry. But he requested that blast of quarry in safer manner.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, three number of petitions were received on the proposed M/s. Thriveni Earth Movers Private Limited project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, from the public and no E-mail representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur on the proposed Rough Stone quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| 13/9/2024 | 13/9/24 | |
| **District Environmental Engineer** | **Sub Collector** | **District Collector** |
| **Tamilnadu Pollution Control Board** | **Hosur** | **Krishnagiri** |
| **Hosur** | 4/7 | 4/7 |
| 13/09/24 | | |

**<u>திரு. திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட், சர்வே. எண்.679/2 (பகுதி 3), தொரப்பள்ளி அக்ரஹாரம் கிராமம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 5.00.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 28.08.2024 அன்று சிப்காட் சர்வீஸ் ரோடு, சிப்காட் 2 வது வளாகம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ சத்யா சாய் கல்யாண மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:</u>**

<u>பங்கேற்றோர்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A. பிரியங்கா I.A.S | : | சார் ஆட்சியர், ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.V.தீனதயாளன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.S.P.R. வெங்கடாசலம் | : | உரிமையாளரின் பிரதிநிதி<br>தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 5 | திரு. S.ராஜ்குமார் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொலுஷன்ஸ், சேலம் |
| | பொதுமக்கள் | : | 66 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர் பொதுமக்கள் மற்றும் தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினகரன் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 23.07.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், தொரப்பள்ளி கிராமம், குமுதேப்பள்ளி கிராமம், அமலட்டி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட்

ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S.ராஜ்குமார், தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. ரவிகுமார், குமுதேப்பள்ளி கிராமம்:**

திரு. ரவிகுமார் அவர்கள், இக்குவாரி நல்ல திட்டம். எனவே, இக்குவாரி தான் வரவேற்பதாக கூறினார்.

2. திரு. மகாதேவன், காந்தி நகர்:

திரு. மகாதேவன் அவர்கள், குவாரிக்கு குத்தகை உரிமை வழங்குகிறீர்கள். அவர்கள், அதற்கு காசு கொடுக்கிறார்கள். ஆனால், இக்கிராமத்திற்கு என்ன செய்தீர்கள்? குறைந்தது 2000 செடிகளை நட்டு குவாரி பணி முடிவதற்குள் வளர்த்து காட்ட வேண்டும். இது வருங்கால தலைமுறைக்கும் மற்றும் கால் நடைகளுக்கு உதவும். ஓசூரில் இந்த வருடம் 130 டிகிரி வெயில் இருந்தது. எந்த ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் இல்லை. இது நாள் வரை ஓசூருக்கு இந்நிலை வந்ததில்லை. இதற்கு காரணம், காமன் தொட்டி பகுதியில் மழை பெய்வதில்லை. ஆனால், நடுக்காட்டில் மழை பெய்கிறது. இதேபோல், பேரண்டபள்ளியிலும் மழை பெய்வதில்லை. இதற்கு காரணம், குறைந்த அளவு மர செடிகள் இருப்பதே ஆகும். எனவே, மேற்கூறியவாறு 2000 அல்லது 3000 மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

3. திரு. வினோத், அமலட்டி கிராமம்:

திரு. வினோத் அவர்கள், இக்குருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவது எங்கள் கிராமத்தில் யாருக்கும் தெரியாது. இக்குவாரியால் கிராமத்தில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் பாதிப்படைவார்கள். எனவே, குவாரியால் பாதிப்படையும் பஞ்சாயத்து மக்களுக்கு இக்கருத்து கேட்புகூட்டம் நடைபெறுவது குறித்து தெரிவிக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும், ஒலிபெருக்கியின் மூலம் மதியம் 12 மணி முதல் 1 மணி வரையில் அறிவிப்பு செய்யும் போது யாரும் ஊரில் இருக்க மாட்டார்கள். எனவே, மாலை அல்லது காலை நேரங்களில் அறிவிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதேபோல், பத்திரிக்கையில் அறிவிப்பு செய்வது அனைவருக்கும் தெரியாது. எனவே, அனைத்து மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் அறிவிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஓசூரை சுற்றிலும் அதிகளவில் குவாரிகள் அமைந்துள்ளன. அவற்றை நாங்கள் எதிர்ப்பதில்லை. ஆனால், சாலை வசதி சரியில்லாமல் இருக்கிறது மற்றும் அக்குவாரியிலிருந்து வரும் கனரக வாகனங்கள் சரியான இடைவெளியில் செல்வதில்லை. மேலும், அவர்கள் செடிகளை அழிக்கின்றனர். அதற்கு, நிகரான செடிகளை வளர்ப்பதில்லை மற்றும் நிலத்தடிநீர் அதிகளவில் பாதிப்படைந்துள்ளது.

தற்பொழுது, நீர்சூழல், நிலச்சூழல் மற்றும் காற்றுச்சூழல் ஆகியவை நன்றாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். ஆனால், கிராமத்தில் உள்ள மக்கள் பாதிப்படைகின்றனர். மேலும், சாலைவசதி அமைப்பதில்லை, குவாரிகளில் வெடி வைக்கும் பொழுது அதிகளவில் அதிர்வுகள் ஏற்படுகிறது. இதனால் வீடுகளில் அதிர்வு ஏற்படுகிறது. எனவே, இக்குவாரியானது 100 மீட்டர் முதல் 150 மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஆனால், 500 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவில் குவாரி அனுமதி வழங்க வேண்டும் என்று சட்ட விதிகள் இருக்கிறது. இதனால், வெடி வைப்பதினால் அருகிலுள்ள உள்ள வீடுகளில் விரிசல் விழுகிறது. இதனை கேட்டால், அவர்கள் சட்டத்திற்குட்பட்டு குவாரி இருப்பதாக கூறுகின்றனர். எங்கள் ஊரில் உள்ள குவாரியால் நிலம், நீர், கால்நடைகள் பாதிப்படைகிறது.

மக்களுக்கு, மருத்துவ வசதி இதுவரை செய்யப்படவில்லை. வருடத்திற்கு ஒருமுறையாவது மருத்துவ வசதி செய்ய வேண்டும். மேலும், ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் சந்தித்து பேசினால் என்ன பாதிப்பு ஏற்படுகிறது என்று விசாரிக்க வேண்டும்.

இங்கு, பொது மக்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். விவசாயமானது அதிகளவில் பாதிப்படைகிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

எங்கள் ஊருக்கு சாலை வசதியில்லை இதற்கு காரணம் சாலை வசதி செய்தால் வனவிலங்குகள் பாதிப்படையும் என்று கூறினார்கள். ஆனால், கல்குவாரி மட்டும் சாலை வசதியுடன் காட்டுக்குள் இயங்குகிறது.

மேலும், எங்கள் கிராமத்தில் செல்லும் ஆற்றில் தூசு படிந்து மாசடைந்துள்ளது. எனவே, அந்த ஆற்று நீரின் மாசினை பரிசோதிக்க வேண்டும்.

எனவே, மேற்கூறிய எனது கருத்துக்களை அனைத்து மக்களுக்காகவும் பரிசீலித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**4. திரு. ராமமூர்த்தி, தொரப்பள்ளி பஞ்சாயத்து:**

திரு. ராமமூர்த்தி அவர்கள், நீங்கள் நேற்று இரண்டு குவாரிகள் குறித்து கூறினீர்கள். தற்பொழுது இரண்டு குவாரியை குறித்தும் கூறியுள்ளீர்கள். நாங்கள் 30 வருடங்களாக முயற்சி செய்தும் 500 மீட்டர் அளவில் கூட சாலை அமைக்க இயலவில்லை. ஏனெனில் வனத்துறை அனுமதி வழங்கவில்லை. ஆனால், குவாரி நிர்வாகத்தினர் சாலையமைத்துள்ளனர். இது குறித்தே, திரு. வினோத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் பள்ளி மாணவர்கள் அச்சாலையில் செல்லும் போது அதிகளவில் பள்ளங்கள் உள்ளது. ஆகவே, அதனை சரிசெய்ய சாலையமைக்க அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், இரண்டு குவாரி வருவதற்கும் எவ்வித ஆட்சபேனை இல்லை. ஆனால், பாதுகாப்பாக வெடி வைப்பது குறித்தும் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து 3 மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை, மின்னஞ்சல் மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை,

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 13/9/24 | 13/9/24. | |
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | சார் ஆட்சியர்<br>ஓசூர் | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி |
| 13/9/24 | 5/7 | 5/7 |